ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2189/51 - 2020 අගෝස්තු මස 21 වැනි සිකුරාදා - 2020.08.21

*2189/51 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: உது/2/5/2/56-பீ.
காணி அமைச்சின் இல.: 13/97/FR/151-B.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், உடதும்பர பிரதேச செயலகப் பிரிவில், கரபகேடிய கிராம அலுவலர் பிரிவில், வின்ச்பீல்ட் பார்க் வத்த என்று அழைக்கப்படும் இடத்தை, நில அளவையாளர் நாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட மஹ 6645 ஆம் இலக்கம் கொண்ட காணித் துண்டு இல. 01 இல் விபரிக்கப்பட்டுள்ள 10.7406 ஹெக்டயார் காணித் துண்டு விஸ்தரிப்பதற்காக எடுக்கப்படுகின்றன.

உரிமை கோருபவர் : திருமதி. டீ. ஜீ. பொடிமெனிக்கே, இல. 100, கந்தேவத்த, மாத்தளை.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு உடதும்பர பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். காணி உரிமையை உறுதிப்படுத்துவதற்கு இருக்கும் காணியின் ஒப்பனை அல்லது வேறு ஆவணங்கள் பரிசோதனை செய்யும் திகதியில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

சுஜானீ ஆர். விஜேதுங்க,
பிரதேச செயலாளர்,
உடதும்பர.

பிரதேச செயலகம்,
உடதும்பர,
*2020, ஓகத்து 18.*

*9 - 153*

1A - G 32721 - 22 (2020/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*